ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

27.03.2025

1. தவயோக நெறிகளை தாண்டி
தான தருமமே மகா சக்தியாக
அவணியோர்க்கு மாற்றம் தரவிருக்க
அன்னதனால் அரங்கன் யானும்

2. யானுமே அன்னதானக் குடிலமைத்து
எளியோரும் தொண்டாற்றி உயர
ஞானமாக அளித்து ஞானவழியை
ஞானிகள் துணைபட செய்தருள

3. அருளவே இன்று உலகோர்க்கு
அருட்சுவடி வழி குரோதி சேல் திங்கள்
ஈராம் குருவார அருளாசியாக
இனிதே அரங்கனும் வழங்கிடுவேன்

4. வழங்கிட ஊழதை வென்றிட
வருமுலகில் பிறவித் தொடரும்
களங்கமான நிலை கடந்திட
கருணையே வடிவாக ஆறுமுகனார்

5. ஆறுமுகனார் அருளும் பிரணவக் குடிலுக்கு
அணுகியே உங்களின் மனதார
ஆறுமுகா அரங்கா என வேண்டி
அபயம் அபயம் என சரணாகதி கொண்டு

6. கொண்டுமே தொண்டர்களாகி
குடிலின் தொண்டதனில் உதவி
உண்டான அருளமுதை உண்டு
உலகோரும் அறிகின்ற வண்ணம்

7. வண்ணமுடன் சோதியாய் அருளும்
வள்ளல் அரங்கன் என் புகழை
மண்ணுலகில் பரப்பி வர
மாதரும பலத்தில் பலரும் பங்கேற்று

8. பங்கேற்று பொருளுதவி செய்து
பண்பான பரிபக்குவ நிலை
ஓங்காரக் குடில் நோக்கி வந்தடைய
உயர்வான சேவைதனை ஆற்றிட

9. ஆற்றிடும் அன்பர்கள் தனக்கு
அரங்கனும் முருகனும் இணைந்து
மாற்றம் பல தந்தருள் புரிவோம்
மண்ணுலகுக்கே வழிகாட்டும் வண்ணம்

10. வண்ணமுடன் வரம்பல தந்து
வாழும் காலமே எங்களின் சக்தி
எண்ணம் மனம் தேகம் நிரம்ப
எல்லாம் உணர்ந்து தெளிந்து

11. தெளிந்துமே ஞானிகளாகவே
தேற்றம் கண்டு பிறவா வண்ணம்
அழியாமை கண்டு உயருவர்
அரங்கன் யானருளிய குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி